**KPR IAS Academy**
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# தவெக ஆட்சி அமைப்பதில் இழுபறி

**சென்னை, மே 8:** தமிழக வெற்றிக் கழகம் (தவெக) ஆட்சி அமைப்பதற்கு திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் வெள்ளிக்கிழமை ஆதரவு தெரிவித்தன. விசிகவின் நிலை என்ன என்பது அறிவிக்கப்படவில்லை. இதனால், விஜய் ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடிக்கிறது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்ற தவெக, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. திமுக 59, அதிமுக 47, காங்கிரஸ் 5, பாமக 4, விசிக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் தலா 2, பாஜக, தேமுதிக, அமமுக தலா ஒரு தொகுதிகளில் வெற்றி பெற்றன.

ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மைக்கு 118 இடங்கள் தேவை. தவெக தலைவர் விஜய் இரு தொகுதிகளில் போட்டியிட்ட நிலையில், 107 இடங்கள் மட்டுமே அக்கட்சியிடம் உள்ளது. தனிப்பெரும் கட்சி என்ற அடிப்படையில், ஆட்சி அமைக்க உரிமை கோரி தமிழக ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகருக்கு விஜய் கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் அனுப்பினார்.

திமுகவுடன் கூட்டணியை முறித்துக் கொண்ட காங்கிரஸ் கட்சி, தவெக ஆட்சி அமைக்க புதன்கிழமை ஆதரவு அளித்தது.

**இடதுசாரிகளும் ஆதரவு:** இதற்கிடையே, தவெக ஆட்சி அமைப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தங்களது ஆதரவை வெள்ளிக்கிழமை தெரிவித்தன. இந்த இரு கட்சிகளும் தலா இரு தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

**3-ஆவது முறையாக ஆளுநரைச் சந்தித்த விஜய்:** இடதுசாரிகள் ஆதரவு தெரிவித்ததையடுத்து தவெக ஆட்சி அமைப்பதற்கான ஆதரவு எம்எல்ஏக்களின் எண்ணிக்கை 116-ஆக உயர்ந்துள்ளது. இதையடுத்து, தவெக தலைவர் விஜய், ஆளுநர் ஆர்லேகரை மூன்றாவது முறையாகச் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதம் அளித்தார்.

முன்னதாக, மாலை 4.30 மணிக்கு ஆளுநரை விஜய் சந்திப்பதாக இருந்தது. ஆனால், இடதுசாரி கட்சிகளின் ஆதரவு கடிதம் கிடைக்கத் தாமதமானதால், மாலை 6.50 மணியளவில் ஆளுநரை விஜய் சந்தித்தார். அவருடன் கட்சி நிர்வாகிகள் என். ஆனந்த், கே.ஏ.செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, பி.வெங்கடரமணன், கே.ஜி.அருண்ராஜ், திரைப்படத் தயாரிப்பாளர் கே.வெங்கட் நாராயணா, ஆந்திர மாநில தொழிலதிபர் விஷ்ணு ரெட்டி ஆகியோர் வந்தனர்.

ஆளுநர் ஆர்லேகர் கேட்ட அறுதிப் பெரும்பான்மை எண்ணிக்கையான 118-ஐ நிரூபிக்காததால் ஆட்சி அமைக்க விஜய்யை ஆளுநர் அழைக்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

**விசிக நிலைப்பாடு:** தவெக ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிலைப்பாடு சனிக்கிழமை (மே 9) காலை அறிவிக்கப்படும் என அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் கு. பாவலன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை இரவு வெளியிட்ட அறிக்கை: ஆட்சி அமைக்க தவெக ஆதரவு கேட்ட நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உயர்நிலைக் குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை இணையவழியில் நடைபெற்றது. உறுப்பினர்கள் பகிர்ந்த கருத்துகளின் அடிப்படையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. விசிகவின் நிலைப்பாட்டை கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் சனிக்கிழமை (மே 9) அறிவிப்பார் என அதில் தெரிவித்துள்ளார்.

விசிக ஆலோசனைக் கூட்டம் முடிந்த பிறகு திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை திருமாவளவன் சந்தித்துவிட்டுச் சென்றார்.

## இடதுசாரிகள் ஆதரவு; விசிக நிலை என்ன?



ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகரை 3-ஆவது முறையாக வெள்ளிக்கிழமை சந்தித்த தவெக தலைவர் விஜய்.

## ஐயூஎம்எல் ஆதரவு தர மறுப்பு

இரு சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தவெகவுக்கு ஆதரவு அளிக்க மறுத்து விட்டது.

திமுகவுடன்தான் கூட்டணி தொடரும் எனத் திட்டவட்டமாக தெரிவித்துவந்த அக்கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொகிதீனை தவெக கொள்கை பரப்புச் செயலர் கே.ஜி.அருண்ராஜ் மூன்றாவது முறையாக வெள்ளிக்கிழமை சந்தித்து ஆதரவு கோரினார். இதை ஏற்க மறுத்த அக்கட்சி, தமிழகத்தில் ஜனநாயக முறைப்படி ஆட்சியை நிறுவ ஆளுநர் எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிக்கை வெளியிட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தர இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஒப்புதல் அளித்துவிட்டதாகத் தகவல் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், ஆதரவு தெரிவிக்கவில்லை என ஐயூஎம்எல் மறுப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டது.

## திருமாவளவன் முதல்வரா?



**சென்னை, மே 8:** தமிழக அரசியலில் பரபரப்பு திருப்பமாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் முதல்வராகலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

பேரவைத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்ற விஜய் தலைமையிலான தவெக ஆட்சி அமைக்க முயன்று வருகிறது. அக்கட்சி விசிகவிடம் ஆதரவு கோரியது. அதற்கு, தவெகவிடம் விசிகவுக்கு துணை முதல்வர் பதவி கோரப்பட்டதாகவும், இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்ற விஜய் ராஜிநாமா செய்யும் ஒரு தொகுதியில் விசிக போட்டியிடுவதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என கேட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதற்கு தவெக தரப்பில் உறுதியான பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், திமுக, அதிமுக ஆதரவுடன் திருமாவளவன் தலைமையில் ஆட்சி அமைக்க முயற்சிகள் நடைபெறுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. விசிக பொதுச் செயலர் சிந்தனைச் செல்வன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடு குழம்பிப் போயிருக்கலாம். எழுச்சித் தமிழர் தெளிந்த நீரோடை. நாளைய பொழுது நமக்காய் விடியும்' எனக் குறிப்பிட்டுள்ளது அரசியல் களத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜார்க்கண்டில் 2006-இல் சுயேச்சை எம்எல்ஏவாக இருந்த மதுகோடா, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வராகப் பதவியேற்ற வரலாறும் நிகழ்ந்திருக்கிறது.

## குதிரை பேரமா?



அமமுக பொதுச் செயலர் டி.டி.வி.தினகரன், ஆளுநர் ஆர்லேகரை வெள்ளிக்கிழமை இரவு சந்தித்தார்.

அப்போது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என்று ஆளுநரிடம் டி.டி.வி.தினகரன் கடிதம் அளித்தார்.

மேலும், மன்னார்குடி தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்ட அமமுக வேட்பாளர் காமராஜ் வெற்றி பெற்றிருந்தார். இந்நிலையில், எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு கடிதம் அளித்த பின்னர் காமராஜை காணவில்லை என்றும், தமிழகத்தில் குதிரை பேரம் நடைபெறுகிறது என்றும் ஆளுநரிடம் டி.டி.வி.தினகரன் புகார் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் விசாரணைக்கு ஆளுநர் உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே, 2-ஆவது முறையாக டி.டி.வி.தினகரன் ஆளுநர் மாளிகைக்கு வந்து ஆளுநரை சந்தித்தார். பின்னர், காமராஜ் எம்எல்ஏவுடன் செய்தியாளர்களைச் சந்தித்த டி.டி.வி.தினகரன், காமராஜ் எம்எல்ஏ பெயரில் தவெகவுக்கு ஆதரவாக அக்கட்சி ஆளுநரிடம் கொடுத்த கடிதம் மோசடியானது எனத் தெரிவித்தார்.

# பேறுகால சர்க்கரை நோயைத் தடுக்கும் திட்டம்: சோதனை முயற்சியாக அமல்

**சென்னை, மே 8:** பேறுகால சர்க்கரை நோயைத் தடுக்கும் புதிய சிகிச்சைத் திட்டத்தை சோதனை முயற்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்படுத்தியுள்ளது. அதன்படி, சென்னையில் அரசு மகப்பேறு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

டாக்டர் சேஷய்யா வளர்சிதை மாற்றங்களுக்கான ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆய்வு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதில், கர்ப்பிணிகளுக்கு எட்டாவது வாரத்திலேயே உணவுக்கு பிந்தைய ரத்த சர்க்கரை அளவை (போஸ்ட் பிராண்டியல்) பரிசோதித்து, தேவைப்படுவோருக்கு அதற்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அதன் பயனாக அவர்கள் அனைவருக்கும் பேறு கால சர்க்கரை நோய் தடுக்கப்பட்டது.

இதையடுத்து, அத்திட்டத்தை சோதனை முயற்சியில் அரசு செயல்படுத்தவுள்ளதாக முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அண்மையில் அறிவித்தார். அதன்படி, தற்போது அத்திட்டம் சில மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

கருவுற்ற பெண்களுக்கு சராசரியாக 10-ஆவது வாரத்தில் ரத்த சர்க்கரை பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்போது உணவுக்கு பிந்தைய ரத்த சர்க்கரை அளவு 110 எம்.ஜி/டி.எல்-க்கு அதிகமாக இருந்தாலோ, அல்லது மூன்று மாத சர்க்கரை அளவு (ஹெச்பிஏ1சி) 5.3-க்கு அதிகமாக இருந்தாலோ, சம்பந்தப்பட்ட கர்ப்பிணிக்கு பேறு கால சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இதைத் தடுக்க பத்தாவது வாரத்துக்கு மாற்றாக எட்டாவது வாரத்திலேயே அந்த பரிசோதனையை மேற்கொண்டு பேறுகால சர்க்கரை நோய்க்கு வாய்ப்புள்ள கர்ப்பிணிகளுக்கு மெட்ஃபார்மின் 250 மி.கி. மருந்தை நாள்தோறும் இரண்டு வீதம் அளிக்கும் சிகிச்சையை முன்னெடுத்து வருகிறோம். இதனால், பேறுகால சர்க்கரை பாதிப்பைத் தடுக்கலாம்.

விரைவில் அதற்கான முடிவுகள் வெளியிடப்பட்டு தமிழகம் முழுவதும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனை: மக்கள் நல்வாழ்வுத் துறை ஏற்பாடு

**சென்னை, மே 8:** பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் வெள்ளிக்கிழமை (மே 8) வெளியாகியுள்ள நிலையில், அதனால் மாணவர்களுக்கு உளவியல் தாக்கம் ஏற்படாமல் தடுக்க அவர்களுக்கு மனநல ஆலோசனைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மக்கள் நல்வாழ்வுத் துறை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, உளவியல் ரீதியான ஆலோசனைகள் தேவைப்படும் மாணவர்களும், பெற்றோரும் 104, 14416 ஆகிய உதவி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இதுதொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில் 104 மருத்துவ உதவி தகவல் மையம் மற்றும் 14416 நட்புடன் உங்களோடு மனநல சேவை மையம் ஆகியவை 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

104 மருத்துவ உதவி தகவல் மையம் மூலமாக பொதுமக்களுக்கு உடல் நலம் குறித்த அறிவுரைகள், மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேபோன்று 14416 நட்புடன் உங்களோடு மனநல சேவை மையமானது மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான உளவியல் ஆலோசனைகளை அளித்து வருகிறது.

இந்த உதவி மையங்கள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்களில் சிலர் அதிக மன அழுத்தம் உள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு தொடர் உளவியல் ஆலோசனைகள் அளிக்கப்பட்டன. மேலும் மாவட்ட மனநல உளவியலாளர்களிடம் பரிந்துரைக்கப்பட்டு உயர் நிலை ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அந்த வகையில் நிகழாண்டும் பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவையொட்டி, தேர்ச்சியடையாத மாணவர்களுக்கு 104 மற்றும் 14416 உதவி மையத்தில் மனநல மருத்துவர் ஒருவர், 8 உளவியல் ஆலோசகர்கள், 40 மனநல உளவியலாளர்கள் உள்பட 50 பேர் வாயிலாக ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

மன அழுத்தத்தில் இருக்கும் மாணவர்கள், இந்த மையத்தை தாங்களாகவே தொடர்பு கொண்டு பேசலாம். அதேபோன்று, மாணவர்களின் பெற்றோரும் தொடர்பு கொண்டு தங்கள் குழந்தைகளின் நிலையைக் கூறி அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவது குறித்து ஆலோசிக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# புலம்பெயர்வு மேலாண்மையில் முழுமையான அணுகுமுறை கடைப்பிடிப்பு: ஐ.நா.வில் இந்தியா தகவல்

நியூயார்க், மே 8: 'புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது' என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபை அலுவலகத்தில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச புலம்பெயர்வு மறுஆய்வு மன்றத்தின் அமர்வில் பங்கேற்றுப் பேசியபோது இக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:

இந்தியர்களின் புலம்பெயர்வு வரலாறு பரந்த, ஆற்றல் மிக்கதாகும். உலகம் முழுவதும் 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் 3.4 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் புலம்பெயர்ந்து, பல நூற்றாண்டுகளாக பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் மட்டுமன்றி கருத்துகளை இணைக்கும் பாலமாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்கள் சொந்த நாட்டுக்குப் பணம் அனுப்புவது, முதலீடுகள் மற்றும் அறிவுசார் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, அவர்கள் புலம்பெயர்ந்துள்ள நாட்டின் வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றனர்.



நியூயார்க்கில் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் தலைமை இயக்குநர் ஏமி போப்பை சந்தித்துப் பேசிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்திவர்தன் சிங்.

இத்தகைய சூழலில், புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது.

வலுவான ஆள் கடத்தல் தடுப்பு சட்டங்கள் அவசியம்: இடப்பெயர்வு என்பது மக்கள் மற்றும் அவர்களின் விருப்பங்கள், மீன்திறன், பங்களிப்புகள் தொடர்புடையது ஆகும்.

சட்டவிரோத இடப்பெயர்வு, ஆள்கடத்தல், சமூக பாதுகாப்பில் உள்ள இடைவெளிகள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் அதேவேளையில் அனைவரையும் உள்ளடக்கிய, மனிதாபிமான, எதிர்காலத்துக்கு உகந்த ஒரு கட்டமைப்பை உருவாக்க இந்தியா முயற்சித்து வருகிறது. அகதிகள் விவகாரத்தை புலம்பெயர்ந்தோரை பாதுகாத்தல், இடம்பெயர்வு செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்தையும் மேற்பார்வையிடுதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முழுமையான மற்றும் நடைமுறைக்கு உகந்த கட்டமைப்பு மூலம் இந்தியா நிர்வகிக்கிறது என்றார்.

மேலும், பல்வேறு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களின் நலனுக்காக இந்தியா அறிமுகப்படுத்தியுள்ள 'இ-மைக்ரேட்' வலைதளம் குறித்தும் அந்த நிகழ்ச்சியில் கீர்த்தி வர்தன் சிங் விவரித்தார்.

இந்த வலைதளம் மூலம் பதிவு செய்த மற்றும் மோசடி பட்டியலில் வைக்கப்பட்டுள்ள வெளிநாடு வேலைவாய்ப்பு முகவர்களின் விவரங்கள், தனது விண்ணப்பத்தின் நிலை உள்ளிட்ட பல்வேறு விவரங்களை புலம்பெயர்வோர் தெரிந்துகொள்ள முடியும் என்பதோடு, தங்களின் புகார்களையும் பதிவு செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.

**KPR IAS Academy**
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# தமிழகத்தில் பயணிகளை கையாளுவதில் சென்னை விமான நிலையம் முதலிடம்



**சென்னை, மே 8:** சென்னை விமான நிலையம் தமிழகத்தில் அதிக பயணிகளை கையாளுவதில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த நிதியாண்டுக்கான பயணிகள் பயன்பாட்டு விவரங்களை இந்திய விமான நிலையங்கள் ஆணையம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அதன்படி, சென்னை விமான நிலையத்தை 2025 ஏப் 1 முதல் 2026 மார்ச் 31 வரையிலான கடந்த நிதியாண்டில் சுமார் 2 கோடியே 30 லட்சம் பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். இது 2024 ஏப்.1 முதல் 2025 மார்ச் 31 வரையிலான முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதம் அதிகம். சென்னை உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவது இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இரண்டாவது இடத்தில் கோவை விமான நிலையம் உள்ளது. இந்த விமான நிலையத்தை 32.2 லட்சம் பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். இது முந்தைய ஆண்டைவிட 5.2 சதவீதம் அதிகமாகும்.

தொடர்ந்து, மூன்றாவது இடத்தில் திருச்சி பன்னாட்டு விமான நிலையம் 22.2 லட்சம் பயணிகளுடன் உள்ளது. தென்கிழக்காசிய நாடுகளுக்கான சேவைகள் இந்த விமான நிலையத்தில் இருந்து அதிகமாக இருப்பதால் திருச்சி விமான நிலையம் இந்த வளர்ச்சியைக் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்த இடங்களில் மதுரை விமான நிலையம் 13.8 லட்சம் பயணிகளுடன் நான்காவது இடத்தையும், தூத்துக்குடி விமான நிலையம் 2.90 லட்சம் பயணிகளுடன் ஐந்தாவது இடத்தையும், சேலம் விமான நிலையம் 1.27 லட்சம் பயணிகள் பயன்பாட்டுடன் ஆறாவது இடத்திலும் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சி, சுற்றுலா மேம்பாடு, சர்வதேச விமான இணைப்பு சேவைகள் அதிகரித்திருப்பதற்கான முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது.

# பிளஸ் 2 பொதுத் தேர்வில் 95.20% தேர்ச்சி

சென்னை, மே 8: பிளஸ் 2 பொதுத் தேர்வில் 95.20 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைவிட 0.17 சதவீதம் அளவுக்கு தேர்ச்சி அதிகரித்துள்ளது. 489 அரசுப் பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியைப் பெற்றுள்ளன. மாணவிகளின் தேர்ச்சி விகிதம் மாணவர்களைவிட 3.81 சதவீதம் அதிகம்.

தமிழகத்தில் பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வு கடந்த மார்ச் 2-ஆம் தேதிமுதல் மார்ச் 26-ஆம் தேதி வரை நடைபெற்றது. பிளஸ் 2 தேர்வு முடிவுகள் அடங்கிய பகுப்பாய்வு அறிக்கையை சென்னை நுங்கம்பாக்கம் பேராசிரியர் அன்பழகன் வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் பள்ளிக் கல்வித் துறைச் செயலர் பி.சந்தரமோகன் வெள்ளிக்கிழமை வெளியிட்டார்.

அதன் விவரம்: பிளஸ் 2 பொதுத் தேர்வை 4 லட்சத்து 18,724 மாணவிகள், 3 லட்சத்து 72,930 மாணவர்கள் என மொத்தம் 7 லட்சத்து 91,654 பேர் எழுதியுள்ளனர். அதில் 4 லட்சத்து 6,167 மாணவிகள் (97 சதவீதம்), 3 லட்சத்து 47,527 மாணவர்கள் (93.19 சதவீதம்) என மொத்தம் 7 லட்சத்து 53,694 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம் 95.20 சதவீதமாக உள்ளது. மாணவிகளின் தேர்ச்சி விகிதம் மாணவர்களைவிட 3.81 சதவீதம் அதிகமாகும்.

பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கு 7,874 பேர் வரவில்லை. கடந்த 2025-ஆம் ஆண்டு தேர்ச்சி சதவீதம் 95.03-ஆக இருந்தது. கடந்த ஆண்டைக் காட்டிலும் நிகழாண்டு 0.17 சதவீதம் தேர்ச்சி அதிகரித்துள்ளது.

**100 சதவீத தேர்ச்சி...** பொதுத் தேர்வை ஒட்டுமொத்தமாக மொத்தம் 7,536 மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எழுதினர். அவற்றில் 2,639 பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியையும், 5,170 பள்ளிகள் 95 சதவீத தேர்ச்சியையும் பெற்றுள்ளன. அதேவேளையில் 489 அரசுப் பள்ளிகள் 100 சதவீத தேர்ச்சியையும், 1,572 அரசுப் பள்ளிகள் 95 சதவீத தேர்ச்சியையும் பெற்றுள்ளன. ஏதேனும் ஒரு பாடத்தில் 100 மதிப்பெண் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 16,024-ஆக உள்ளது. இதில் அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 1,695 ஆகும்.

## ஈரோடு மாவட்டம் முதலிடம்

**ஈரோடு முதலிடம்:** அதிக தேர்ச்சி விகிதத்தில் ஈரோடு (98.87) மாவட்டம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அதேபோன்று அரசுப் பள்ளிகள் பிரிவில் ஈரோடு (98.24), சிவகங்கை (96.97), திருச்சி (96.55), தென்காசி (96.15), கன்னியாகுமரி (96.12) ஆகிய மாவட்டங்கள் முறையே முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

**சிறைவாசிகள்...** தேர்வெழுதிய 8,855 மாற்றுத் திறனாளிகளில் 6,811 பேர் (76.92) தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வெழுதிய 250 சிறைவாசிகளில் 238 பேர் (95.20 சதவீதம்) தேர்ச்சி பெற்றனர்.

பிளஸ் 2 தேர்வை தனித்தேர்வர்களாக 25,521 பேர் எழுதியதில் 6,171 பேர் (24.18 சதவீதம்) தேர்ச்சி பெற்றனர். பிளஸ் 1 வகுப்பில் தனித்தேர்வர்களாக 20,444 பேர் தேர்வெழுதியதில், 8,491 பேர் (41.53 சதவீதம்) தேர்ச்சி பெற்றனர்.

**தேர்வு முடிவுகளை அறிய...** மாணவர்கள் தங்களுக்கான தேர்வு முடிவுகளை www.tnresults.nic.in, www.dge.tn.gov.in, results.digilocker.gov.in ஆகிய இணையதள முகவரிகளில் பிறந்த தேதி, பதிவெண் ஆகியவற்றைப் பதிவு செய்து அறிந்து கொள்ளலாம். பள்ளியில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கும், தனித்தேர்வர்களுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணுக்கும் குறுஞ்செய்தி மூலமாக தேர்வு முடிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், வாட்ஸ்ஆப் செயலியில் 78452 52525 என்ற எண்ணை உங்கள் தொலைபேசி எண் தொடர்புகளில் சேமித்து வைத்து, அந்த எண்ணில் ட்ன் எனப் பதிவிட்டு பின்னர் வரும் செய்தியில் துறையின் பெயர், தேர்வர்களின் வகுப்பை தெரிவு செய்தால், தொடர்ந்து வரும் பதில் செய்தியில் தேர்வெண், பிறந்த தேதியை உள்ளீடு செய்து அனுப்பினால் தேர்வர்களின் தேர்வு முடிவுகளை அதே வாட்ஸ் ஆப் செயலி உரையாடல் மூலம் கண்டறியலாம்.

### முக்கியப் பாடங்களில் 100-க்கு 100 மதிப்பெண் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| தமிழ் | 83 |
| ஆங்கிலம் | 21 |
| இயற்பியல் | 105 |
| வேதியியல் | 632 |
| உயிரியல் | 784 |
| கணிதம் | 732 |
| தாவரவியல் | 31 |
| விலங்கியல் | 18 |
| கணினி அறிவியல் | 6,945 |
| வணிகவியல் | 683 |
| கணக்குப் பதிவியல் | 1,946 |
| பொருளியல் | 440 |
| வரலாறு | 282 |
| கணினிப் பயன்பாடுகள் | 2,099 |
| வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் | 463 |

### பாடப் பிரிவு வாரியாக தேர்ச்சி சதவீதம்

| | |
|---|---|
| அறிவியல் | 96.90 |
| வணிகவியல் | 92.67 |
| கலை | 85.19 |
| தொழிற்பாடம் | 85.97 |

### முதன்மைப் பாடங்களில் தேர்ச்சி சதவீதம்

| | |
|---|---|
| இயற்பியல் | 98.87 |
| வேதியியல் | 98.82 |
| உயிரியல் | 99.49 |
| கணிதம் | 99.12 |
| தாவரவியல் | 98.62 |
| விலங்கியல் | 98.69 |
| கணினி அறிவியல் | 99.84 |
| வணிகவியல் | 97.55 |
| கணக்குப் பதிவியல் | 98.04 |
| வரலாறு | 97.90 |

### பள்ளிகள் வகைப்பாடு வாரியாக தேர்ச்சி சதவீதம்

| | |
|---|---|
| அரசுப் பள்ளிகள் | 92.16 |
| அரசு உதவி பெறும் பள்ளிகள் | 96.14 |
| தனியார் சுயநிதிப் பள்ளிகள் | 98.72 |
| இரு பாலர் பள்ளிகள் | 95.30 |
| பெண்கள் பள்ளிகள் | 97.08 |
| ஆண்கள் பள்ளிகள் | 90.49 |

### மாவட்ட வாரியாக ஒட்டுமொத்த தேர்ச்சி சதவீதம்

| | |
|---|---|
| ஈரோடு | 98.87 |
| சிவகங்கை | 98.05 |
| கன்னியாகுமரி | 97.63 |
| திருநெல்வேலி | 97.54 |
| திருச்சி | 97.50 |
| தூத்துக்குடி | 97.24 |
| தஞ்சாவூர் | 97.19 |
| தென்காசி | 97.18 |
| விருதுநகர் | 97.17 |
| நாமக்கல் | 97.04 |
| திருப்பூர் | 97.03 |
| ராமநாதபுரம் | 96.70 |
| கோவை | 96.66 |
| சேலம் | 96.61 |
| கரூர் | 96.20 |
| மதுரை | 96.13 |
| திண்டுக்கல் | 95.92 |
| புதுக்கோட்டை | 95.88 |
| கடலூர் | 95.57 |
| சென்னை | 95.43 |
| காஞ்சிபுரம் | 95.31 |
| தேனி | 95.27 |
| பெரம்பலூர் | 94.53 |
| நாகப்பட்டினம் | 94.38 |
| கள்ளக்குறிச்சி | 94.26 |
| நீலகிரி | 94.13 |
| திருவள்ளூர் | 94.11 |
| திருப்பத்தூர் | 93.68 |
| மயிலாடுதுறை | 93.51 |
| தருமபுரி | 93.49 |
| செங்கல்பட்டு | 93.25 |
| திருவண்ணாமலை | 92.87 |
| அரியலூர் | 91.70 |
| கிருஷ்ணகிரி | 91.31 |
| திருவாரூர் | 91.00 |
| வேலூர் | 90.73 |
| ராணிப்பேட்டை | 88.20 |
| விழுப்புரம் | 85.92 |

## மே 13 முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்

சென்னை, மே 8: பிளஸ் 2 பொதுத் தேர்வு தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் மே 13-ஆம் தேதிமுதல் அந்தந்த பள்ளிகளில் வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து அரசுத் தேர்வுத் துறை இயக்குநர் க. சசிகலா கூறியதாவது: பிளஸ்-2 பொதுத் தேர்வு தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் மே 13-ஆம் தேதி காலை 11 மணி முதல் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் தங்கள் பள்ளிக்கு வழங்கப்பட்ட யூசர் ஐடி, கடவுச் சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு உரிய மதிப்பெண் பட்டியலை கையொப்பம், முத்திரையுடன் வழங்கலாம். மேலும், மாணவர்கள் தங்களது பிறந்த தேதி, பதிவெண் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற தளத்தில் உள்ளீடு செய்து தாங்களே பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**துணைத் தேர்வுக்கு...** தேர்வுக்கு வராதவர்கள், தோல்வி அடைந்தவர்கள் அடுத்ததாக துணைத் தேர்வில் பங்கேற்று தேர்ச்சி பெறும் வகையில், அதற்கான தேர்வு ஜூன் 29-ஆம் தேதி முதல் ஜூலை 7-ஆம் தேதி வரை நடைபெறும். இந்தத் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு மே 18-ஆம் தேதி தொடங்கி ஜூன் 2-ஆம் தேதி நிறைவடையும். மேலும், மறுமதிப்பீடு, மறுகூட்டலுக்கு ஜூன் 5-ஆம் தேதிமுதல் 8-ஆம் தேதி வரை இணையவழியில் விண்ணப்பிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுடனான மோதலின்போது பாகிஸ்தானுக்கு ஆதரவு

## முதல்முறையாக சீனா ஒப்புதல்

பெய்ஜிங், மே 8: இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்தாண்டு நடைபெற்ற 4 நாள் மோதலில் பாகிஸ்தானுக்கு தொழில்நுட்ப ரீதியில் ஆதரவு அளித்ததை சீனா முதல்முறையாக ஒப்புக் கொண்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர்.

இதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்கீழ் இந்திய ராணுவ நடவடிக்கை எடுத்தது. இதற்கு பாகிஸ்தான் ராணுவமும் எதிர்வினையாற்றியது. இதனால் 2 நாடுகளுக்கும் இடையே 4 நாள்கள் மோதல் நீடித்தது. பின்னர் சண்டை நிறுத்தம் ஏற்பட்டதால் தாக்குதலை 2 நாடுகளும் நிறுத்திக் கொண்டன.

இந்த மோதலின்போது பாகிஸ்தானுக்கு சீனா பல்வேறு உதவிகளை செய்ததாகவும், சீனாவின் ஜே-10சிஇ நவீன போர் விமானங்களை இந்தியாவுக்கு எதிராக தாக்குதல் நடத்த பாகிஸ்தான் பயன்படுத்தியதாகவும் தகவல்கள் வெளிவந்தன. ஆனால் அதுகுறித்து பதிலளிக்காமல் சீனா மௌனம் காத்து வந்தது.

இந்நிலையில், சீனாவின் நவீன போர் விமானம் மற்றும் ஆளில்லா ட்ரோனை வடிவமைத்ததில் முக்கிய பங்காற்றியவரும், அந்நாட்டு விமான வடிவமைப்பு மற்றும் ஆய்வு நிறுவனத்தின் (ஏவிஐசி) மூத்த பொறியாளருமான ஜாங் ஹெங்கின் பேட்டியை அந்நாட்டு அரசு தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அதில் ஜாங், 'இந்தியாவுடனான மோதலின்போது, பாகிஸ்தானில் சீன நிபுணர் குழு தங்கியிருந்து தொழில்நுட்ப ரீதியில் உதவி செய்தது' என்று கூறியுள்ளார்.

ஏவிஐசி நிறுவனத்தின் இன்னொரு ஊழியரான சுவு டா, 'ஜே-10சிஇ போர் விமானம் எங்களது குழந்தை போன்றது. அதை பயன்படுத்த சரியான வாய்ப்பு தேவைப்பட்டது. அதற்கான நேரம் (ஆபரேஷன் சிந்தூர்) வந்தபோது, நாங்கள் நினைத்தது போல விமானம் செயல்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.